Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 10 ஞாயிற்றுக்கிழமை (26.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:360

# இந்தியாவின் ஆதரவு இல்லாமல் நாம் சமாதான முயற்சியில் முன்னேற முடியாது

## தமது விஜயத்தின் போது அதனை முன்னிறுத்தியே ஜனாதிபதி ராஜபக்ஷ புதுடில்லியில் பேசுவார்

கொழும்பு,நவ.26

**இந்தியாவின் ஆதரவு இன்றி நாம் சமாதான முயற்சியில் ஒரு போதும் முன்னேற்றம் காணமுடியாது. எனது இந்திய விஜயத்தில் அதனை முன்னிறுத்தியே அந்நாட்டுத் தலைவர்களுடன் இம்முறை பேச்சுக்களை நடத்த உள்ளேன் - இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை புதுடில்லி புறப்பட்ட ஜனாதிபதி -

அதற்கு முன்னர் வெள்ளிக்கிழமை இரவு இந்தியச் செய்தியாளர்களில் ஒரு சிலரைச் சந்தித்து 3 மணி நேரம் உரையாடினார்.

பொருளாதாரத் துறையில் எமக்கு இந்தியாவின் உதவி தேவை. அதேபோன்று சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் அதன் ஆதரவு அவசியம். அந்நாட்டின் பங்களிப்பின்றி சமாதான முயற்சியில் ஒரு போதும் முன்னேற்றம் காண முடியாது நான் இந்தியாவுக்கு நன்றி உள்ளவன் ஆவேன். அது எமது அயல் நாடு மட்டுமன்றி சிறந்த நண்பனுமாகும் - என்றார்.

இந்தியாவுக்கு அவர் விஜயம் செய்யும் போது அங்கு அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட இருப்பதாக தெரிவிக்கும் தகவல் குறித்துக் கேட்டபோது -

நான் எனது வாழ்க்கையில், பல எதிர்ப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் சந்தித்துள்ளேன். அது ஒரு வகையில் நல்லது. அவை ஒருவருடைய சக்தியை அதிகரிக்கும். வேண்டுமானால் ஆர்ப்பாட்டம் செய்பவர்களுடன் நானும் சேர்ந்து கொள்வேன். - என்றார்.

இந்தியத் தலைவர்களுடன் நான் நடத்தவுள்ள கலந்துரையாடல்களின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதனை வலியுறுத்திச் சொல்வேன் ... தமிழ் நாட்டில் உள்ள சில அரசியல் தலைவர்கள், எல்லாத் தமிழ் மக்களும் புலிகள் அல்லர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறையில் பல்கலை மாணவனை எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு, நவ.26

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக் கழக மூன்றாம் வருட மாணவன் சிவராஜா பகீரதனை தமிழக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பார்வையிட்டனர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், கி.சிவநேசன் ஆகியோர் நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றனர்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள பகீரதனைச் சந்தித்து அவருடன் உரையாடினர். (அ-1)

## நகரில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்.நகரப் பகுதியில் - கே.கே.எஸ். வீதியில் நேற்றுப் பிற்பகல் படையினரை இலக்குவைத்து கிரனேட் வீசப்பட்டது

எனினும் இதில் படையினருக்கு சேதம் எதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்குண்டுவீச்சால் நகரில் பதற்ற நிலை காணப்பட்டது. (1)

## வவுனியாவில் கிளைமோர் கான்ஸ்டபிள் மரணம்

வவுனியா,நவ.26

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் நேற்றுக்காலை 7.15 மணியளவில் ரோந்து சென்ற பொலீஸாரை இலக்கு வைத்துக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பின்னர் உயிரிழந்தார். (அ-1-164)

## அம்பாறையில் நேற்றுக்காலை புலிகள்-அதிரடிப்படை மோதல்

அம்பாறை,நவ.26

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடா மற்றும் சங்கமன்கந்தை ஆகிய முகாம்களிலிருந்து விசேட அதிரடிப் படையினர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தங்கவேலாயுதபுரம் பகுதியை நோக்கி நேற்றுக்காலை 7 மணியளவில் பெரும் தாக்குதல்களுடன் முன்னேற்ற முயற்சி ஒன்றை மேற்கொண்டனர் எனவும் -

விடுதலைப் புலிகளின் படையணிகள் அதிரடிப் படையினரைஇடைமறித்து பதில் தாக்குதல் நடத்தி அவர்களை பின்வாங்கச் செய்தனர் எனவும் - புலிகள் தரப்புத் தகவல்கள் நேற்றுமாலை தெரிவித்தன.

கடுமையான மோட்டார் மற்றும் ஆட்லறி தாக்குதல்களுடன் தங்கவேலாயுதபுரம் பகுதிக்குள் முன்னேறி வந்த அதிரடிப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்ட நேரமாக அங்கு கடும் சமர் நடந்தது என்று அப்பகுதிப் பொது மக்கள் தரப்புத் தகவல்களை மேற்கோள் காட்டி சில இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இந்தத் தாக்குதலில் அதிரடிப் படையினர் தரப்பில் நால்வர் உயிரிழந்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் கடற்புலிப் போராளியான இலக்கியன் (வயது - 24) என்பவரும் ஜெயப் பிரகாஷ் (வயது - 21) என்ற தரைப் போராளியும் சாவடைந்திருக்கின்றனர் என்று புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப் பாளர் தெரிவித்தார்.

மோதலின் இடையில் சிக்கி தாண்டியடியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சுசிகரன் (வயது - 24) என்ற பொது மகனும் பலியானார்.

இந்த மோதலுக்குப் பின்னர் மீண்டும் தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்ற அதிரடிப்படையினர் புலிகளின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இனம்புரியாத காய்ச்சலினால் வலி.வடக்கில் இருவர் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.26

குடாநாட்டில் பரவிவரும் இனம்புரியாத வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இருவர் நேற்று உயிரிழந்தனர்.

மானிப்பாயைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரான கந்தையா ஸ்ரீபதி (வயது 52); மல்லாகம் மில் ஒழுங்கையைச் சேர்ந்த சிவகுரு கமலாதேவி (வயது56) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்த மரணங்கள் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி.ச.இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.

ஒரு வாரமாக இவர்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வந்தனர் என்றும் -

அவர்களில் ஒருவருக்கு ஏற்கனவே இருந்த தொய்வும் மற்றவருக்கு இருந்த நீரிழிவும் காரணமாக இருவருக்கும் ஏற்பட்ட இருதய பலவீனத்தால் மரணம் சம்பவித்தது என்றும் பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டதாக நீதிவான் தெரிவித்தார். (அ-1)

## கிளிநொச்சிப் பகுதியில் நேற்றும் கிபிர் விமானங்கள் குண்டுவீச்சு

கிளிநொச்சி,நவ.26

கிளிநொச்சியில் ஐந்தாவது நாளாக நேற்றும் கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

நேற்றுமுற்பகல் 10 மணியளவில் வன்னி வான்பரப்பினுள் நுழைந்த இரு கிபிர் விமானங்கள் கிளிநொச்சி நகருக்கு தென் கிழக்காக நான்கு கிலோமீற்றர் தொலைவில் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது எட்டுக்கும் அதிகமான தடவைகள் குண்டுகளை வீசின என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிவரங்கள் நேற்றுமாலை வரை வெளியாகவில்லை.

இதேவேளை, இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான மற்றும் இரண்டு ரஷ்யத் தயாரிப்பு எம்.ஐ.ஜி.ரக விமானங்கள் நேற்றுக் காலை கிளிநொச்சி வான் பரப்பில் பறந்து நோட்டமிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-12)

### ஏ-9 ஊடாக உணவு எடுத்துச் செல்ல

## அனுசரணை வழங்குமாறு அரசு கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.26

யாழ்ப்பாணத்துக்கு - கிளிநொச்சி ஊடாக - ஏ-9 பாதை ஊடாக உணவுப் பொருள்களை எடுத்துச்செல்ல அனுசரணை வழங்குமாறு அரசு கோரியுள்ளது என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஓமர்சன் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையேயான வழமையான சந்திப்பின்போது யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை கிளிநொச்சி வழியாக - ஏ-9 பாதை ஊடாக - எடுத்துச்செல்ல அனுசரணை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பில் உள்ளார். இது தொடர்பில் புலிகளுடன் அவர் விவாதிப்பார் - என்றார் அவர்.

இதனிடையே - யாழ்ப்பாணத்துக்கான மாற்றுப்பாதையாக பூநகரி - சங்குப்பிட்டி பாதையைப் பயன்படுத்துவது குறித்து பார்வையிட இலங்கை போர்நிறுத்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## பறையனாளங்குளத்தில் மீட்கப்பட்ட சடலங்களில் மூவரின் சடலங்கள் நேற்று இனங்காணப்பட்டன

### இரு மாணவர்களும் அடங்குவர்

வவுனியா,நவ.26

வவுனியா பறையனாளங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட அறுவரில், மூவரின் சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டன.

அவர்களில் இருவர் மாணவர்கள் என்றும், மற்றையவர் வர்த்தகர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு நடந்த மோதல் ஒன்றில் கொல்லப்பட்ட விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் எனத் தெரிவித்து ஆறு பேரின் சடலங்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இச்சடலங்களை நேற்றுப் பார்வையிட்ட பொதுமக்களில் மூவர் நேற்று அடையாளம் காட்டினர்.

வவுனியா வர்த்தகரான கந்தையா விக்கினேஸ்வரன் (வயது 25 - வவுனியா), மாணவர்களான பரமசிவம் [illegible]நாதன் (வயது 19 - குருக்கள் குளம்), ஆரியதாச ரஞ்சித் பியதாச (வயது 19 - தவசிக்குளம்) ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்களாவர். (அ-1)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு மொத்த விற்பனைக் கிளைகளில் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை

யாழ்ப்பாணம், நவ.26

குடாநாட்டில் இயங்கும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சி.டபிள்யூ.ஈ) எட்டுக் கிளைகள் ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிறுவனத்தின் கீழ் இயங்கும் யாழ். வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இச்சங்கத்தின் கிளைகளான நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், மட்டுவில், பருத்தித்துறை ஆகியன ஊடாக பொருள்கள் விநியோகிக்கப்பட உள்ளன.

மேற்படி கிளைகள் ஊடாக வழங்கப்படவிருக்கும் பொருள்களும் அவற்றின் விலைகளும் வருமாறு:-

| பொருள்களின் வகை | விற்பனை விலை |
|---|---|
| அரிசி வகை - குத்தரிசி 1 கிலோ | 38.00 |
| சம்பா அரிசி 1 கிலோ | 40.00 |
| தீட்டல் அரிசி 1 கிலோ | 40.00 |
| சீனி - 1 கிலோ | 68.00 |
| தேயிலை - 200கிராம் | 60.00 |
| மல்லி - 1 கிலோ | 104.00 |
| செத்தல் - 1 கிலோ | 254.00 |
| பயறு - 1 கிலோ | 130.00 |
| கித்துள் பனங்கட்டி - 250 கிராம் | 69.00 |
| பப்படம் | 21.00 |
| பெ.சீரகம் - 1 கிலோ | 164.00 |
| மா - 1 கிலோ | 53.00 |
| மிளகு - 1 கிலோ | 388.00 |
| பருப்பு - 1 கிலோ | 83.00 |
| பால்மா வகை - அங்கர் Pkt | 177.00 |
| லக்ஸ்பிறே Pkt | 167.00 |
| லங்கா சதோசா மில்க் பவுடர் Pkt | 145.00 |
| சவர்க்காரம் சன்லைட் - தனி | 23.00 |
| லக்ஸ் - தனி | 26.00 |
| லைபோய் - தனி | 27.00 |
| பேபிசோப் - தனி | 23.00 |
| மீன்ரின் - தனி | 108.00 |
| நெத்தலி - 1/2 கிலோ | 110.00 |
| மகி மில்க் பவுடர் (350 கிராம்) Pkt | 152.00 |

# புற்றுநோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், நவ.26

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் நாளை திங்கட்கிழமை கதிர்வீச்சுச் சிகிச்சை ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தச் சிகிச்சை தேவைப்படுவோரை நாளை காலை 8 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் 26ஆம் வார்ட்டில் சமுகமளிக்கும்படி அவர் கேட்டுள்ளார். (1)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும், பழைய மாணவியும், பழைய மாணவர் சங்க உப தலைவருமாகிய

**திருமதி சோமேஸ்வரி கைலாசநாதன்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (55599) பழைய மாணவர் சங்கம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**அமரர் திரவியம் பரமானந்தம்**

தோற்றம்: 26.10.1925 மறைவு: 28.10.2006

இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை, நாளை (27.11.2006) திங்கட்கிழமை நண்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தினையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

"நித்திய யோக வாசா",
ஜோன் ராஜா வீதி,
அச்சுவேலி. (55605)

தகவல்:
நித்தியானந்தகுமார் (பவா),
குடும்பத்தினர், பிள்ளைகள்,
மருமக்கள்.



## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையின் முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும், தற்போது தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடமையாற்றியவருமாகிய

**கந்தையா ஸ்ரீபதி** அவர்களது

திடீர்மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தீவகம் வடக்கு, உதவி அரச
அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை. (55602)

உதவி அரசாங்க அதிபரும்,
சகல உத்தியோகத்தர்களும்.

# குடாநாட்டில் மரக்கறிகள் உச்சவிலையை எட்டியுள்ளன

யாழ்ப்பாணம், நவ.26

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மரக்கறிகளின் விலை உச்சவிலையை எட்டியுள்ளன.

குடாநாட்டுச் சந்தைகளில் கத்தரிக்காய் 400 ரூபாவாகவும் மோதகவள்ளி 200 ரூபாவாகவும் முருங்கைக்காய் 300 ரூபாவாகவும் தக்காளிக்காய் 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் வெண்டி 80 ரூபாவாகவும் கரட் 60 ரூபாவாகவும் கோவா 90 ரூபாவாகவும் டுபாய் பூசணி 140 ரூபாவாகவும் பயிற்றங்காய் 160 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மரக்கறிகளும் உச்சவிலையில் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - தேங்காய் 90 முதல் 100 ரூபா வரைக்கும் முட்டை 40 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (203)

## வரலாற்றுப் பாடங்கள் மீண்டும் அறிமுகம்

தென்மராட்சி, நவ.26

பாடசாலைகளில் வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியியல் கல்வியும் ஆகிய பாடங்கள் மீண்டும் கற்பிக்கப்படவுள்ளன.

அடுத்த வருடம் தொடக்கம் தரம் 6, தரம் 9 ஆகிய வகுப்புகளில் இப் பாடங்கள் புதிய கல்விச் சீர்திருத்த திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

முன்னர் இப்பாடங்கள் கற்பிக்கப்பட்டு பின்னர் மூன்று பாடங்களையும் ஒன்றிணைத்து சமூகக்கல்வி என்றும் பாடமாக மாற்றப்பட்டு கற்பிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (203)

## கார்த்திகை விளக்கீடு எதிர்வரும் 4ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ.26

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த கார்த்திகை விளக்கீடும், திருவிளக்குப் பூசையும் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி 3.15 மணிக்கு குத்துவிளக்கு பூசையும் வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று அம்பாள் வீதி உலா வருவதைத் தொடர்ந்து சொர்க்கப்பனை எரித்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (203-86)

## அச்சுவேலியில் பாணுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியுள்ளது

அச்சுவேலி, நவ.26

அச்சுவேலியில் பாணுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியுள்ளது. பொதுமக்கள் தமக்கு விரும்பிய இடங்களில் "பாண்" வாங்கக்கூடியதாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதிய உதயனில் அச்சுவேலியில் பாணுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக செய்தி வெளியாகியதை அடுத்து 24ஆம் திகதி காலையில் இருந்து பாணை தட்டுப்பாடு இன்றி பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (203-11)

தரம் 5
புலமைப்பரிசில்
2007
முதலாம்
பரீட்சை
இன்று
**BOND**

**நாய் விற்பனைக்கு**

9 மாதங்கள் நிரம்பிய (காலிக்குயின்) ஆண்நாய், சகல ஊசிகளும் போடப்பட்டது. விற்பனைக்குண்டு.
தொடர்பு: 222 6935.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியையும், நலன் விரும்பியுமான

திருமதி
**சிவகுரு ஞானரத்தினம்**
அவர்களின்

மறைவையொட்டி எமது ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்துவதோடு, அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேவாலய வீதி,
சங்கானை. (சி.50476)

பாடசாலைச் சமூகம்,
யா/சங்கானை அ.மி.த.க.
பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

**கந்தையா ஸ்ரீபதி**

அவர்கள் 25.11.2006 சனிக்கிழமை காலமானதையிட்டு நாம் துயரமடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

பிரதேச செயலரும்,
அலுவலர்களும். (55603)

# மரம் நடுகை

நவாலி, நவ.26

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் 'சொண்ட்' நிறுவனத்தின் மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ் பல பயன்தரு மரங்கள் நட்டு வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் ஒத்துழைப்புடன் 'சொண்ட்' நிறுவன பணிப்பாளர் இ. வாகீசன் தலைமையில் நேற்றுமுன்தினம் கூழாவடி பூந்தளிர் சிறுவர் கழகத்தினரும் மகளிர் கிராம முன்னேற்ற கழகத்தினரும் இணைந்து ஐம்பதுக்கு மேற்பட்ட சமண்டலை, தேக்கு, மலைவேம்பு போன்ற மரங்களை வைத்தியசாலையின் புதிய காணியில் நட்டுள்ளனர். (203-100)

# மரண அறிவித்தல்கள்

## குமாரகுலசிங்கம் சிவநாதன்

*(முன்னாள் நெல் சந்தைப்படுத்தும் சபை ஊழியர், அண்ணா கோப்பி நிறுவன ஊழியர்)*



மானிப்பாய் சோதி வேம்படி வீதியில் வசித்த குமாரகுலசிங்கம் சிவநாதன் நேற்றுமுன்தினம் (24.11.2006) வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் - பாலாம்பிகை தம்பதியரின் மகனும் வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சத்தியதேவியின் அன்புக் கணவரும் சத்தியபாமா (ஜேர்மனி), சிவகுமாரன் (கொழும்பு), ரஜனி (4ஆம் வருடம் பொருளியல்துறை மாணவி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமாரின் (ஜேர்மனி) அன்பு மாமனும் பாலசிங்கம், சத்தியநாதன், ராஜநாதன், விஜயலஷ்மி, ராஜலஷ்மி, தனலஷ்மி காலஞ்சென்றவர்களான ருக்குமணிதேவி, அருந்தவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதி வேம்படி லேன்,
மானிப்பாய். (55597)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## கந்தையா ஸ்ரீபதி

(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - தெல்லிப்பழை, முன்னாள் RDO ஊர்காவற்றுறை, கரவெட்டி, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)



மீசாலையைப் பிறப்பிடமாக்வும், கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை வதிவிடமாகவும் தற்போது சந்தை வீதி மானிப்பாயில் வசித்து வந்தவருமாகிய கந்தையா ஸ்ரீபதி நேற்று (25.11.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மீசாலையை சேர்ந்த காலஞ் சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் புதல்வரும் தெல்லிப்பழையை சேர்ந்த காலஞ்சென்றவரான நாகேந்திரம் மற்றும் சீதாலட் சுமி தம்பதியரின் மருமகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும், ரோகா, நிஷாந் (கனடா), விதுஷாந், கிரிஷாந், சினேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாவதி (கனடா), புஸ்பவதி, கமலாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான திலகவதி, புனிதவதி, கைலாசபதி, இராசபூவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோஜன், தயாளன், தினகரன், கணேசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சந்தை வீதி மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
மானிப்பாய். (55601)

தகவல்:
மனைவி
(மம்மிடி - சாவகச்சேரி)

## திருமதி விமலாதேவி சோமசுந்தரம்



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட விமலாதேவி சோமசுந்தரம் 24.11.2006 வெள்ளிக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், யோகசுந்தரம், விமலதாஸன் ஆகியோரின் அன்புத் தாயும் டொரின், சிவலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியும் கிருத்திகா, லோகீஸன், கிருஷாந்தன், மிருதுளவாணி, டுளஷிகா கவிசாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்கொழும்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.
031 223 6753.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்த மாதிரிக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்தவங்கியில் எல்லாவிதமான இரத்த மாதிரிகளுக்கும் பற்றாக்குறை இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'பொசிற்றிவ்' வகையிலும் பார்க்க 'நெகடிவ்' வகைகளுக்கே பற்றாக்குறை நிலவுகிறது. 'ஓ' நெகடிவ் மாதிரிக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது.

இரத்த வங்கியின் கையிருப்பில் எல்லா வகையையும் சேர்ந்த 400 பைந்து இரத்தம் கையிருப்பில் இருப்பது அவசியம். ஆனால் தற்பொழுது 170 பைந்து மட்டுமே உள்ளது.

நாள் ஒன்றிற்கு 25 தொடக்கம் 40 பைந்து வரையான இரத்தம் பாவிக்கப்படுகிறது. ஆனால் நாள் தோறும் பெறப்படுவது பத்து பைந்தில் இருந்து நாற்பது வரை வேறுபடுகிறது.

ஆகஸ்ட் மாதத்தில் நடமாடும் சேவை மூலம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் ஒரே நாளில் 123 பைந்து இரத்தத்தை தானமாக வழங்கி இருந்தனர்.

இதை அசாதாரண சூழ்நிலையில் நோயாளிகளுக்கு வழங்க முடிந்தது. தற்பொழுது இரத்த வங்கி இருபத்து நான்கு மணிநேரமும் இயங்க வேண்டிய தேவை உள்ளது, இயங்குகிறது.

வங்கிக்குத் தேவையான இரசாயன பதார்த்தங்கள் மற்றும் இரத்த மாதிரிகளை கண்டறிவதற்கான கருவி என்பன கொழும்பில் உள்ள பிரதிநிதியால் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உணவுப் பற்றாக்குறை அதன் மூலமான இரத்த சோகை என்பவற்றால் இளைஞர், யுவதிகள் இரத்த தானம் செய்ய முன்வருவது குறைவடைந்துள்ளது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-88)

# மனிதாபிமான அடிப்படையில் நிபந்தனையின்றி ஏ-9 பாதையைத் திறக்க நடவடிக்கை எடுங்கள்

## சுவாமி சித்ரூபானந்தா இந்திய வெளியுறவுச் செயலாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ.26

அரசியலுக்கு அப்பால் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக எந்தவிதமான நிபந்தனையும் இன்றி ஏ-9 பாதையை உடன் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டால் மக்களுக்கு இருக்கும் அனைத்துத் துன்பங்களும் நீங்கி விடும். இல்லையெனில் பாரதூரமான துன்பம்தான் ஏற்படும்.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உணவு, மருந்து, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மிகக் குறைந்த அளவிலேயே மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை போதுமானதாக இல்லை.

மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் இப்பொருள்களின் அளவை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சமாதானம் என்ற போர்வையில் மக்களைத் துன்புறுத்தக் கூடாது. யுத்தத்தை விட்டு சமாதானத்தை முன்னெடுக்க ஆக்க பூர்வமாக இலங்கை அரசு செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியப் பிரதமரிடம் இவ்விடயம் தொடர்பாகத் தெரிவித்து இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்து இதற்குரிய நடவடிக்கையை உடன் மேற்கொள்ளவேண்டும்.- என்றுள்ளது.

இதேவேளை-

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கு ஏற்கனவே 80 செக்கனில் தந்தி மூலம் இவரால் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(203-173)

# வைரஸ் காய்ச்சல் குறித்து மக்களே அதிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்

நல்லூர், நவ.26

''சிக்குன் குனியா''வை ஒத்த வைரஸ் காய்ச்சல் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது.

இதனைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு மருத்துவத்துறையை விட பொது மக்களே அதிக விழிப்புடன் செயற்படவேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சி.சிவன்சுதன் மக்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

டெங்கு, சார்ஸ் போன்ற நோய்களை விட 'சிக்குன் குனியா' வைரஸ் காய்ச்சல் ஆபத்தான நோய் அல்ல. எனினும் இதன் அறிகுறிகள் முற்றாக மறைவதற்கு சிலருக்கு 3 அல்லது 4 வாரங்கள் கூடச் செல்லலாம்.

சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் குருதி போன்றவற்றின் மாதிரி பரிசோதனைக்காக கொழும்பு, தாய்லாந்து ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உரிய முடிவுகள் இன்னமும் கிடைக்கவில்லை.

தினந்தோறும் 50 நோயாளர்கள் சிகிச்சைக்கு வருகின்றனர். குறைந்தபட்ச அளவிலானவர்களே வார்டில் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர். வார்டில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்கள் இரண்டு மூன்று நாள்களில் குணமடைந்து திரும்பி விடுகின்றனர்.

வேறு நோய்கள் இருப்பவர்களிடம் இந்த நோய்க்கான அறிகுறிகள் காணப்படின் அவர்கள் கண்டிப்பாக வைத்தியரை அணுகுவது அவசியம் என்றார் டாக்டர் சிவன்சுதன். (203-111)

## நலன்புரி நிலையங்கள் வடமராட்சியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.26

வடமராட்சியில் உள்ள இடம்பெயர்ந்தோர் தங்கி இருக்கும் நலன்புரி நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் உள்ள ஏழு முகாம்களில் அரசசார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றன.

கூடாரங்கள், கொட்டில்கள் என்பனவற்றின் கூரைகள் உறுதியான மரங்கள் கொண்டு செப்பனிடப்படுவதுடன் தரை பகுதிகளுக்கு சீமெந்தும் இடப்பட்டு வருகின்றன.

கப்பூது முகாமில் உள்ள குடிசைகள் சிலவற்றில் தனிக்குடும்பங்களும் அதிகமானவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாகவும் -

சில கொட்டில்களில் நான்கு குடும்பங்கள் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-88)

# நாளை முதல் பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.26

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாளைமுதல் குழந்தைகளுக்கான பால்மா விநியோகம் ஆரம்பமாகவுள்ளது.

ஒரு வயது முதல் மூன்று வயதான பிள்ளைகளுக்கு அங்கர் 1+ பால்மா இலவசமாக வழங்கப்படவுள்ளது. குழந்தைகளின் பெற்றோர்கள் உரிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், மத்திய மருந்தகங்களில் குறிப்பிட்ட தினத்தில் குழந்தைகளின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டைக் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும் என தெல்லிப்பழை பதில் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை தெல்லிப்பழை, குளமங்கால், கந்தரோடை, சங்குவேலி ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உடுவில் மத்திய மருந்தகத்திலும்-நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அளவெட்டி சீனன் கலட்டி, மயிலங்காடு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்-புன்னாலைக்கட்டுவன், மல்லாகம், ஏழாலை, இணுவில் மத்திய மருந்தகத்திலும்-இப்பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பால்மா விநியோகம் செய்யப்படவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 29ஆம் திகதி தாவடி, அளவெட்டி, வசாவிளான் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் சுன்னாகம் மத்திய மருந்தகத்திலும் பால்மா விநியோகம் செய்யப்படவுள்ளது. (203-68)

* * *

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சிகிச்சை நிலையங்களில் நாளை திங்கட்கிழமை முதல் 5 நாள்கள் ஒரு வயது தொடக்கம் 3 வயது வரையான குழந்தைகளுக்கு அங்கர் 1+ பால்மா வழங்கப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை பாசையூர், குருநகர் ஆகிய இடங்களிலும், எதிர்வரும் 29ஆம் திகதி நல்லூர், அரியாலை ஆகிய இடங்களிலும், 30 ஆம் திகதி சுவாமியார் வீதி, ஜூபிலி ஆகிய இடங்களிலும், முதலாம் திகதி நாவலர், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களிலும், இரண்டாம் திகதி கொட்டடி, ஆத்திசூடி ஆகிய இடங்களிலும் பால்மா விநியோகம் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (203)

## தென்மராட்சியில் நுளம்பு வலைக்கு பெரும் தட்டுப்பாடு

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி பிரதேசத்தில் நுளம்பு வலைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தற்போது நுளம்பு அதிகரித்துள்ள [illegible] நுளம்புத்திரிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் நுளம்பு வலை கொள்வனவு செய்வதற்காக பொது மக்கள் கடைகடையாக அலைவதைக் காண முடிகின்றது.

# தீர்க்க தரிசனமும் வள்ளன்மையும் நிறைந்த பெரும் கல்விமான் சேர்.பொன். இராமநாதன்

யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழக வளாகம் நிறுவப்படுவது இந்த நாட்டுக் கல்வித்துறையிலே, சிறப்பாக யாழ் மாநிலக் கல்வித்துறையிலே புதியதோர் சகாப்தத்தின் ஆரம்பம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். இது வடமாநிலக் கல்வி வரலாற்றிலேயே மிகப் பெரிய திருப்பமாக அமையுமென்பது நிச்சயம். எதிர்காலத்தில் இந்நாட்டுக் கல்வி



வரலாற்றை எழுதுவோர் அனைவரும் இந்த நிகழ்ச்சியை அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் குறிப்பிடுவர் என்பதில் ஐயமில்லை.

இப்பணி பொதுவாக இந்நாட்டு வருங்காலச் சந்ததியினரும், சிறப்பாக வடமாநில வருங்காலச் சந்ததியினரும் உயர் துறைகள் பலவற்றில் மேம்பாடடைவதற்கு அடிகோல வல்ல அரும் பணியாகும். கல்வி அமைச்சராகக் கடமையாற்றிய ஏனைய எவருமே செய்ய முன்வராத இம்முக்கிய பணியை நிறைவேற்றிவைத்துள்ளேன் என்பதிலே உண்மையாகவே நான் பெரிதும் பெருமைப் படுகின்றேன்.

இத்தொடர்பிலே முன்னாள் மேற்சபை உறுப்பினரும் பரமேஸ்வராக் கல்லூரி அதிபருமாயிருந்த காலஞ்சென்ற கலாநிதி சு.நடேசன் அவர்களைப் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும். சென்ற முறை நான் கல்வி அமைச்சராகவிருந்த காலத்தில் மேற்சபை உறுப்பினராயிருந்த கலாநிதி. சு. நடேசன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியம் தேவை என்பதைப் பற்றி என்னிடம் பலமுறை குறிப்பிட்டு வந்தார்.

ஆயினும், அப்போது அவர் கருதியதும் கோரியதும் பெரும்பாலும் ஒரு கலாசாரப் பல்கலைக்கழகமேயாகும். எனினும் நான் யாழ்ப்பாண மக்களின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அங்கு பல துறைகளையும் கொண்ட பூரணமான பல்கலைக்கழக வளாகமொன்றை நிறுவ வேண்டும் என்று தீர்மானித்தேன். எனது தீர்மானத்தைப் பிரதமரும் ஏற்றுப் பூரண ஆதரவு நல்கிறார். ஆயினும் எனது தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு முன் தேர்தல் நடை

## இன்று அவரது குருபூசை நாள்

பெற்று அரசாங்கமும் மாறியமையால் தீர்மானத்தை நிறைவேற்றும் வாய்ப்பில்லாது போயிற்று.

இச்சந்தர்ப்பத்திலே இவ்வளாகத்திற்கு மூல நிலையமாகவுள்ள பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவிய சிறந்த கல்விமானும் கொடை வள்ளலுமாகிய சேர்.பொன்.இராமநாதன் அவர்களை நினைவுகூருவதும் நமது கடமையாகும். அவர்கள் மகளிருக்காக நிறுவிய இராமநாதன் கல்லூரியிலே இவ்வாண்டின் முற்பகுதியிலே நுண்கலைக் கல்லூரியை நிறுவினோம். இப்போது அவர்கள் இளைஞர்களுக்காகக் கட்டிய பரமேஸ்வராக் கல்லூரியிலே அந்த நுண்கலைக் கல்லூரியை விடப் பரந்ததும், அதனையும் தன் அங்கங்களுக்குள் ஒன்றாகக் கொள்ளக்கூடியதுமாகிய இவ்வளாகத்[illegible] விய இரு கலா[illegible]

துறையிலே இணையற்ற அரும்பணிக்கு அன்றே வித்திட்டு வைத்த சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் வள்ளன்மையினையும்

**இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தை உற்சவ பூர்வமாக 06.10.1974இல் திறந்து வைக்கும் வைபவத்தில் கல்வி அமைச்சரான, இலங்கைப் பல்கலைக்கழகப் பிரதி வேந்தரான கலாநிதி அல் ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் விடுத்த செய்தியின் சுருக்கம் இது.**

தீர்க்க தரிசனத்தையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

இவ்வளாகம் பல்கலைக்கழகத்துக்கு பொதுவாக உரியதுறைகள் பலவற்றுக்கும் இடமளிக்கும் எனினும், இப்பிரதேசத்திற்கே தனிச்சிறப்பாகவுள்ள தமிழ்மொழி, தமிழிசை, தமிழ்க் கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் அவை பற்றி ஆழமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் தனியிடமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாளகத்திலே உயர் கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெறும் இளைஞர்கள் தன்னம்பிக்கை, தியாகசிந்தை, பொதுநல அக்கறை ஆகிய அருங்குணங்கள் கைவரப்பெறுவது மட்டுமன்றித் தாம் பெறும் ஆற்றல் திறனாலும் ஆராய்ச்சி நுட்பத்தாலும் அகில உலகப் பிரசித்தி பெற்று, தமக்கும் இவ்வளாகத்திற்கும் மட்டுமன்றி, நம் நாட்டுக்கே பெருமைதேடித் தரவல்வராகத் திகழ வேண்டும் என உளமார விழைகின்றேன்.

தகவல்:
[illegible]ர் சி.க.சிற்றம்பலம்
(தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபை, (சேர்.பொன். இராமநாதன் நம்பிக்கை நிதியம்).

## இராமநாதன் குருபூசை

யாழ்ப்பாணம், நவ.26

இணுவில் இராமநாதன் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு இராமநாதன் குருபூசை இடம்பெறவுள்ளது.

அங்குள்ள இராமநாதேஸ்வரம் சமாதி கோயிலில் விசேட பூசை வழிபாடு நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.26

குகன் எரிபொருள் நிலையத்தில் வாகன எரிபொருள் அட்டைகளைப் பெற்று கடந்த 15ஆம் திகதிக்கு முன்னர் பெற்றோல் பெற்றவர்களுக்கு இன்று காலை 6.30 மணிமுதல் விநியோகம் இடம்பெறவுள்ளது.

ஆட்டோ, மோட்டார் சைக்கிள்களுக்கு 300 ரூபாவிற்கும் காருக்கு 500 ரூபா விற்கும் பெற்றோல் வழங்கப்படவுள்ளது.

## மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்களின் கலந்துரையாடல்

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறியினை பூர்த்திசெய்த முதலாம் அணி (2004- 2005) மாணவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்யா இசைப் பயிலகம்

மணியர் பதி வீதி, கொக்குவில் மேற்கு.

இசை , இசை வாத்திய வகுப்புகள் நடைபெறுகின்றன, பழக விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவும்.

- ★ மிருதங்கம்
- ★ ஓகன்
- ★ புல்லாங்குழல்
- ★ வயலின்
- ★ வாய்ப்பாட்டும் பண்ணிசையும்

**க.பொ.த (உ/த) சங்கீதம் கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நடை பெறுகின்றன.**

பாக்யா காகிதாதிகள், 121, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.


## கண்ணீர் அஞ்சலி

அமரர் கந்தையா சிவரத்தினம்

அவர்களின் அன்புச் சகோதரனாகிய

### கந்தையா இராசேந்திரம் (வைரமுத்து)

அவர்கள் 22.11.2006 புதன்கிழமை சிவபதம் அடைந்தார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கலட்டி எச்சாட்டி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

(55577)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்

தகவல்: க.சிவரத்தினம் (அண்ணா)

சாந்தகுமாரி சிவானந்தம் குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 03 - 1945 | 07 - 12 - 2005 |



### மாணிக்கம் சின்னராசா

(திதி - 26.11.2006)

உழைப்பால் உயர்ந்தவரே!
பல்கலையும் பயில வைத்து,
பாரினிலே ஏற்றமுடன்
எமை வாழ வைத்து
பூரிப்பில் முகிழ்ந்த தந்தையே!
ஆண்டொன்று போனாலும்
ஆறிடுமோ எம் துயரம்!

திரவிய பவனம்,
அல்வாய்.

(55414) குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்கு

யாழ். கந்தர்மடத்தில், பல்கலைக்கழகத்திற்கு அருகில் சகல வசதிகளையும் கொண்ட நான்கு அறைகளை உடைய வீடு (சிறிய குடும்பத்திற்கு மட்டும்) உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு 222 5364

## இறைச்சிக் கோழி

கல்பேட் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
NEW R.S.K FARM
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

## விஜி ஹெய்கூல் என்ஜினியர்ஸ்

சகல விதமான குளிர்சாதனங்களையும் (Refridgerator, A/C) வீட்டிலே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகட்கு - க.விஜித்
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

## நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

45 நாள் நிரம்பிய பொக்சர் நாய்க்குட்டி (பாகோ ஊசி போடப்பட்டது) விற்பனைக்குண்டு.

அல்பா மிக்சர் லேன்,
உடுவில் வீதி, மானிப்பாய்.
T.P : 222 2887

(55492)

## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப் பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உப உணவும் ஆகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C யுடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கும் பொருள்களையும் கொண்டது.

BIO TEC ORIENT (PVT) LTD
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
[பாம் ஸ்கூல் அருகில்]
தொ.பே. 021 4590907
32/3, ரெயில்வே அவனியூ,
கொழும்பு - 05
தொ.பே. 0112 852269

(55468)


## தமிழ் மொழிமூல ஊடகவியலாளர்களுக்கான 06 மாத டிப்ளோமா பாடநெறி

### சென்னை அண்ணா பல்கலைக்கழகம்

இலங்கையின் தமிழ் மொழிமூல ஊடகவியலாளர்களின் தொழில்சார் தன்மையையும் திறன்களையும் வளர்ப்பதற்கான இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் டென்மார்க்கின் சர்வதேச ஊடக உதவி நிறுவனமும் தமிழ் மொழியில் கடமையாற்றும் தொழில்சார் ஊடகவியலாளர் குழுவொன்றுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆறுமாத வதிவிடப்பயிற்சியை வழங்கவிருக்கின்றது.

டிப்ளோமா பாடநெறிக்கான இத்திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்படும் ஊடகவியலாளர்களுக்கு தமிழ்நாட்டின் நான்கு பிரபல ஊடக நிறுவனங்களில் நடைமுறைப் பயிற்சியும் வழங்கப்படும்.

2007ஆம் ஆண்டு ஜனவரி முதல் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் இப்பாட நெறியில் சேர விரும்பும் தமிழ் மொழிமூல ஊடகவியலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய மூன்று துறைகளையும் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் ஊடகத்துறையில் கடமையாற்றிருக்கவேண்டும். பிரதேச ஊடகவியலாளர்கள் தமது ஆசிரியர் அல்லது ஆசிரியபீட அதிபரின் சிபாரிசுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

தாம் எழுதிய ஆக்கங்கள் அல்லது இலத்திரனியல் ஊடக ஆக்கங்கள் பற்றிய விவரங்களை சமர்ப்பிக்க முடியுமாயின் அது வரவேற்கத்தக்கதாகும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 01.12.2006

மாதிரி விண்ணப்பப்படிவம்

பெயர் .................... விலாசம் ..............................

தொலைபேசி எண் .................... பிறந்த திகதி ..............

கல்வித்தகைமை ......................

ஊடகத்துறையில் கடமையாற்றியிருக்கும் காலம் ..............

இதற்குமுன்னர் பயிற்சித்திட்டங்களில் கலந்து கொண்டுள்ளீர்களா? விவரம்?.............. (சி/50474)

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி
இணைப்பாளர்,
திறன் வளர்ப்புக்கான டிப்ளோமா பாடநெறி,
இலங்கைப்பத்திரிகை ஸ்தாபனம்.
65/5 வோட்பிளேஸ், கொழும்பு - 07.

e-mail - ranga@slpi.lk T.P. 0115353635


## தேவை

யாழ் - கொழும்பு விமான சேவைக்கு வேலை செய்ய அனுபமுள்ள ஆண் / பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு - 0785788811 / 0785325501

## தேவை

யாழ் - கொழும்பு விமான சேவைக்கு TOYOTA HIACE டொல்பின் வான் வாடகைக்கு தேவை.

தொடர்பு - 0785788811 / 0785325501


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2007

01] கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 2006.12.01 நண்பகல் 12.00 மணிவரை.

02] கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2006.12.05 நண்பகல் 12.30 மணிவரை

03] கேள்வி திறக்கப்படும் திகதி:- 2006.12.06 முற்பகல் 10.00 மணி.

04] கேள்வித் தொகை, கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.

05] கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்கு பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.

06] மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|
| நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1) நெல்லியடி மீன்சந்தை | 100,000.00 | 2,500.00 | 300.00 | - |
| 2) கொட்டடிச் சந்தை | 2,100.00 | 500.00 | 300.00 | - |
| 3) நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 46,750.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 4) நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை இல. 1 | 266,000.00 | 5,000.00 | 300.00 | 200.00 |
| 5) கோயிற் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 6) கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 149,000.00 | 5,000.00 | 300.00 | 100.00 |
| உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 14) அந்திரான் சந்தை | 16,500.00 | 500.00 | 300.00 | - |
| 15) நவிண்டில் சந்தை | 3,500.00 | 500.00 | 300.00 | - |
| 16) உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 5,700.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 17) அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 185,000.00 | 5,000.00 | 300.00 | 100.00 |
| கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 18) துன்னாலை வடக்கு சந்தை | 500.00 | 500.00 | 300.00 | - |

சி.வே.குலநாயகம்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,
22.12.2006

(சி/50472)

## மரண அறிவித்தல்

### செல்வமாணிக்கம் சண்முகசுந்தரம்

[பிரபல சட்டத்தரணியும் இளைப்பாறிய நீதிபதியும்]



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இங்கிலாந்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவருமாகிய பிரபல சட்டத்தரணியும் இளைப்பாறிய நீதிபதியுமாகிய K.S. சண்முகசுந்தரம் 20.11.2006 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் நாதநாயகியின் அன்புக் கணவரும் ரமணிமாலா (U.K.), ஜெயமோகன் (U.K.), உதயகுமார் (கனடா), ஜெகதீசன் (U.K.), மாலினி (U.K.), வசந்தகுமார் (U.K.), சாரங்கா (U.S.A.), ஜானகி (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (U.K.), ஜோன் (U.K.), செல்வராணி (கனடா), மோகினி (U.K.), காலஞ்சென்ற ஜெயமன்ஹேமா (U.K.), Dr.மகேஸ்வரன் (U.S.A), யசோதரன் (U.K.) ஆகியோரின் மாமனும் ஸ்ரீபிரகாஷ், உதயபானு, வானதி, ஆதர்சன், ஆர்த்தி, ஜெயதர்சன், கீர்த்தனா, நிதர்சன், கிஷன், அக்ஷயன், நந்தகிஷோர், சாமந்தி, சாம்பவி, விதுஷன், அனுஷன், தீபிகா, Dr..கேதாரன் ஆகியோரின் பேரனும் மீனாட்சி, வைஷ்ணவி ஆகியோரின் பூட்டனும் வல்வெட்டித்துறை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற குழந்தைவேலு, செல்வமாணிக்கம், ஜனகிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற R.தியாகராசா - கற்பகவல்லி அம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சாரங்கம்மா, மகாலட்சுமி, பரமேஸ்வரி, இரத்தினபாக்கியம், நீலாயதாட்சி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற அப்புக்குட்டியாபிள்ளை காலஞ்சென்ற S.V நடராஜா, முருகுப்பிள்ளை, காலஞ்சென்ற உலககுருநாதன், காலஞ்சென்ற சிவராசா, காலஞ்சென்ற தேவசிகாமணி, நவரத்தினராசா, கமலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் லண்டன், ஸ்டெதம்வோல் (Strathen wale U.K.) மைதானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs.N.Shanmugasundaram
158, Western Road,
Mitcham Surrey,
CR4 - 3E8,
U.K.
Tel: 00447956214491
00447983596418
sri_path@yahoo.com

தகவல்:- தேவசிகாமணி ராம்குமார்
இல.1, ரொட்டுண்டா காடன்ஸ், கொழும்பு-3
தொ.பே. 2436826

(சி/50469)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுளம்புத் தொல்லைக்கும் நுளம்பு நோய்களுக்கும் எதிரான மக்களின் தனிநபர் பாதுகாப்பு முறைகள்

## யாழ்.மக்கள் மத்தியில் நோய் பற்றிய கணிசமான அறிவுண்டு அதனால் அவர்களோடு இணைந்த கட்டுப்பாட்டுமுறை தேவை

வரலாற்று ரீதியாக ஆண்டாண்டு காலமாக குடாநாட்டில் நுளம்புகள் ஏற்படுத்தும் நோய்கள் அதிகமாகவே இருந்துவருகின்றன. இவற்றுள் மலேரியா, டெங்கு என்பன முக்கியமானவையாகும். ஒருபுறம் மலேரியா நோய்த்தாக்கம் குறைவடையும் போது அல்லது கட்டுப்பாட்டிற்குள் வரும்போது டெங்குநோய்த் தாக்கம் அதிகரிப்பதும் மாறாக டெங்கு நோய்த்தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் வரும்போது மலேரியா திடீரெனத் தோன்றிப் பரவுவதுமான ஒருநிலைமையே காணப்படுகின்றது.

**அட்டவணை 1: அண்மைய ஆண்டுகளில் மலேரியா மற்றும் டெங்கு நோயினால் குடாநாட்டில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. (நன்றி DPDHS office, Jaffna )**

| ஆண்டு | நோயாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | மலேரியா | டெங்கு |
| 2002 | 1829 | 32 |
| 2003 | 413 | 127 |
| 2004 | 45 | 113 |

இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலாக தற்போது 'சிக்குன் குனியா' குடாநாட்டை உலுக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் உறைந்துபோயுள்ளனர். இதற்கானபிரதான காரணம் இந்த நோய்களை காவுகின்ற நுளம்புகளின் பெருக்கமே. பூரணப்படுத்தப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத காவிக்கட்டுப்பாட்டு முறைகள், முழுமையற்ற தனிநபர் பாதுகாப்பு முறைகள், காவிக் கட்டுப்பாடு தொடர்பான அறிவு மக்கள் மத்தியில் குறைவாக இருத்தல் போன்றனவாகும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக வடக்கே குடாநாட்டில் ஏற்பட்ட யுத்தசூழ்நிலை காரணமாக உருவான தொடர்ச்சியான உள்நாட்டு இடம்பெயர்வுகள், மட்டுப்படுத்தப்பட்ட மக்களின் நகர்வுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிகள், தேவைக்கு குறைவான சுகாதார உத்தியோகத்தர்களின் சேவை என்பவற்றினால் மக்களின் வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான உள்நாட்டு யுத்தம் காரணமாக ஒழுங்குபடுத்தப்பட்ட காவிக்கட்டுப்பாட்டு முறை (Organized vector control) மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டன. இருந்தபோதிலும் 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் குடாநாட்டுக்கு ஏனைய பகுதிகளுடனான தொடர்புகள் ஏற்பட்

### இது ஓர் ஆய்வு

டன. இதனால், மருத்துவ வசதிகள் சற்று அதிகரித்தன. இந்த நிலைமை சுகாதாரப் பணியாளர்கள் பூச்சிக்கொல்லி மருந்துகளை விசிறுவதற்கும் நடமாடும் மருத்துவசேவைகளை வழங்குவதற்கும் உதவின. இதன் காரணமாக மலேரியா நோய் தற்போது பெருமளவு கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. எனினும், மீண்டும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையால் இவை யாவும் கேள்விக்குறியாகியுள்ளன.

### மக்களின் பங்களிப்பு மிக அவசியம்

நுளம்புகளினால் பரப்பப்படும் நோய்கள் தொடர்பான மக்களின் அறிவு மற்றும் அவர்களின் பங்களிப்பு என்பன நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் நுளம்புகளினால் காவப்படும் நோய்களைக் கட்டுப்படுத்தவதற்கும் அவசியமானதாகும். அதன் பின்னணியில் யாழ்.மாவட்ட மக்களின் நுளம்பு தொடர்பான அறிவு அவற்றிற்காக அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இதற்கான மாதாந்த செலவினம் என்பன தொடர்பாகக் கவனஞ்செலுத்தப்பட்டது.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் நுளம்பு நோய்க்காவிகள் தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குடாநாட்டில் இது தொடர்பாக எந்தவித ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படவில்லை. இக்குறைபாட்டை நிவர்த்திசெய்யும் நோக்கில் ஓர் அங்கமாக வினாக்கொத்து மற்றும் நேரடி நேர்காணல் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பெறுபேறுகள் தற்காலத் தேவையைக் கருத்திற்கொண்டு இங்கே வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

### ஆய்வு செய்யப்பட்ட முறை

வினாக்கொத்து பின்வரும் தகவல்களைப் பெறும்நோக்கில் தயாரிக்கப்பட்டது.

அவையாவன விஞ்ஞான ரீதியிலான மக்கள்தொகை தகவல்கள் , நுளம்புகள், நுளம்புகளினால் காவப்படும் நோய்கள் தொடர்பான அறிவு மற்றும் நுளம்புக் கடியிலிருந்து தப்புவதற்கு அவர்கள் கையாளும் தடுப்புமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

இவை தவிர அடிப்படையாக வீட்டின் வகை, மாதாந்த வருமானம், பதிலளிப்பவரின் தொழில், கல்வித்தகைமை, நுளம்புகள், அவற்றின் நோய் கடத்தும் தன்மை என்பன பற்றிய அறிவு, நுளம்புகளின் தீவிரத்தன்மை, நுளம்புப் பெருக்கத்திற்குச் சாதகமான சூழ்நிலைகள் நுளம்பு கடிக்கும் நேரம், நுளம்புக் கடிக்கு எதிரான தனிநபர் பாதுகாப்பு முறைகள், இவற்றுக்கான மாதாந்தச் செலவினம், போன்றவையும் மதிப்பிடப்பட்டன. யாழ்ப்பாணம், வலிகாமம் கிழக்கு, வடமராட்சி ஆகிய பகுதிகளின் மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு இப்பிரிவுகளிலிருந்து நூற்று ஐம்பத்தி நான்கு வீடுகள் எழுந்தமானமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் இவ்வாறு வெவ்வேறாகப் பெறப்பட்ட தரவுகள் ஒன்றிணைக்கப்பட்டு ஆராயப்பட்டன.

### ஆய்வின் பெறுபேறுகள்


ஆய்விற்குட்படுத்தப்பட்டவர்களுள் 28வீதமானோர் ஆரம்பக்கல்வி கற்றவர்களாகவும் 57 வீதத்தினர் இரண்டாம்நிலைக்கல்வி கற்றவர்களாகவும் 15வீதமானோர் மூன்றாம் நிலைக் கல்வி கற்றவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களுள் 81 வீதமானோரின் மாதாந்த வருமானம் ஐயாயிரம் ரூபாவை விடக் குறைவானதாகக் காணப்பட்டது.

61வீதமானோர் நுளம்புத்தொல்லை தீவிரம் என்றும் 35வீதமானோர் நடுத்தரமானது

> **யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளின்படி நுளம்புகளினரல் பரவும் நோய்கள் பற்றிய மக்களின் அறிவு, அவற்றிற்கான தடுப்புமுறைகள், தனிநபர் பாதுகாப்பு முறைகள், அவற்றிற்கான செலவீனங்கள் என்பன பற்றிய உண்மைநிலையை இக்கட்டுரை விளக்குகின்றது.**

எனவும் 3வீதமானவர்கள் ஒருபோதும் இல்லை எனவும் கூறினர். 52வீதத்தினர் நுளம்புக்கடி மாலையில் அதிகம் எனவும் 41 வீதமானோர் இரவில் அதிகம் எனவும் 7வீதத்தினர் நாள் முழுவதும் தொல்லையாக உள்ளது எனவும் தெரிவித்தனர்.

தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுள் 25 வீதத்தினரில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்




பட்டவர்கள் மலேரியா நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும் 2வீதத்தினர் டெங்குத் தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். எனினும், வீட்டின் கட்டமைப்புத் தன்மைக்கும் நோயின் (மலேரியா) தாக்கம் மற்றும் நுளம்புகளின் தீவிரம் என்பவற்றுக்கும் இடையே எதுவிதத் தொடர்பும் காணப்படவில்லை. 77வீதமானவர்கள் ஏதாவது ஒரு நுளம்பினால் காவப்படும் நோய் தொடர்பான அறிவைக் கொண்டிருந்தனர். இவர்களுள் மிக அதிகமானவர்கள் மலேரியா நோய் பற்றியும் மிகக் குறைவானவர்கள் டெங்கு நோய் பற்றியும் தெரிந்திருந்தனர்.

88 வீதத்தினர் நிலையாகத் தேங்கிநிற்கும் நீரே நுளம்புகளின் பிரதானமான உற்பத்தியாகும் இடம் என்பதனை அறிந்திருந்தனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களது, நுளம்புகளினால் காவப்படும் நோய்கள் தொடர்பான அறிவு நிலைக்கும் அவர்களின் அடிப்படைக் கல்வி அறிவிற்கும் இடையே எதுவிதத் தொடர்பும் இருக்கவில்லை. அதாவது இரண்டாம் மூன்றாம் நிலைக் கல்வி அறிவு அற்றவர்கள்கூட நுளம்புகளினால் காவப்படுகின்ற நோய்கள் பற்றி அறிந்துள்ளனர்.

96வீதமானோர் நுளம்புக்கடிக்கு எதிராக தனிநபர் பாதுகாப்பு முறைகளை பயன்படுத்து கின்றனர். இவர்களுள் அதிகமானவர்கள் தினமும் கணிசமானவர்கள் பருவகாலங்களிலும் குறைந்த அளவினர் எப்போதாவதும் பயன்படுத்துகின்றனர்.

**அட்டவணை 2: ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் வேறுபட்ட தனிநபர் பாதுகாப்பு முறைகள்**

| பாதுகாப்பு முறை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நுளம்புத் திரிகள் | 73(76.8%) |
| நுளம்பு வலைகள் | 11(11.6%) |
| ஆவியாகும் தரைவிரிப்புகள் | 05(5.3%) |
| மின் விசிறி | 01(1%) |
| புகையிடல் | 05(5.3%) |

38வீதமானவர்கள் நுளம்புத்திரி மற்றும் நுளம்புவலை ஆகிய இரண்டையும் பயன்படுத்துகின்றனர். நுளம்புத்திரிகளில் அதிகமானவர்கள் மோட்டீனையும் மிகக் குறைந்த அளவினர் முறையே குட்நைட், நின்யா, லயன்கிங் என்பவற்றையும் உபயோகிக்கின்றனர். 61வீதமானோர் இவற்றுக்காக மாதாந்தம் நூறு தொடக்கம் இருநூறு ரூபா வரையிலும் 21 வீதமானோர் இருநூறு ரூபாவிலும் அதிகமாகவும் மற்றையவர்கள் நூறு ரூபாவிலும் குறைவான பணத்தை தனிநபர் பாதுகாப்பு முறைகளுக்காக செலவிடுகின்றனர். மிகவும் குறைந்த வருமானம் பெறும் சில குடும்பங்கள் அவர்களின் மாதாந்த வருமானத்தில் குறிப்பிடத்தக்க அளவை தனிநபர் பாதுகாப்பு முறைகளுக்காக செலவிடுகின்றன. இத்தனிநபர் பாதுகாப்பு முறைகளுக்காக செலவிடுகின்றன. இத்தனிநபர் பாதுகாப்பு முறைக்கு மேலாக 73 வீதமானோர் தமது வீட்டுச் சூழலில் நீர் தேங்காது தடுத்தல், புற்கள் பற்றைகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு நுளம்பு பெருகுவதை தடுப்பதற்கான வழிமுறைகளைச் செயற்படுத்துகின்றனர்.

### ஆய்வின் அனுமானங்கள்

கடந்த இருபது ஆண்டுகளாக யுத்தத்தாலும் உள்நாட்டு இடம்பெயர்வுகளாலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்ற மக்களை நுளம்புக் கட்டுப்பாட்டு முறைகளின் அவசியம் மேலும் பல சமூக பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ளச்செய்கின்றது. இந்த நிலைமை ஒழுங்குபடுத்தப்பட்ட காவிக்கட்டுப்பாடு மற்றும் நுளம்புகளினால் காவப்படுகின்ற நோய்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள் வழங்கப்படவேண்டியதன் தேவையினை காட்டுகின்றது.

இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் நேர்காணலில் பங்குபற்றியவர்களில் கணிசமானவர்கள் நுளம்புகளால் காவப்படுகின்ற-மனிதனில் ஏற்படுத்தப்படுகின்ற நோய்கள் பற்றி அவர்களுடைய கல்வி அறிவு வேறுபாடின்றி அறிந்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றது. விசேடமாக வரலாற்று ரீதியாக தாக்கம் ஏற்படுத்தும் மலேரியா இந்த அறிவை மக்களுக்கும் கொடுத்திருக்கின்றது. இவர்களில் கணிசமான அளவினர் நுளம்புகளால் காவப்படும் நோய்கள் தொடர்பாகவும் ஆகக்குறைந்தது ஒரு நுளம்பு பெருகுகின்ற இடத்தையும் அறிந்திருப்பதுடன் சுற்றுப்புறச் சூழலை தூண்மையாக வைத்திருப்பதன் அவசியத்தையும் இதன் மூலமாக நுளம்புகளால் காவப்படும் நோய்களை கட்டுப்படுத்த முடியும் என்பதையும் அறிந்திருப்பது அனுகூலமானதும் வரவேற்கத்தக்கதுமமான ஒரு விடயமாகும்.

அந்நேரத்தில் நுளம்புக்கடி தீவிரம் எனக்கூறினர். அதிகளவிலான மக்கள் தனிநபர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். பருவகாலங்களிலேயே குறிப்பாக மழை காலங்களிலேயே அதிகளவு பயன்படுத்துகின்றனர். இதற்குக் காரணம் மழைகாலங்களை அண்டி சுற்றாடலில் பெருமளவு நீர் தேங்கி நிற்கின்றமையாகும். இது நுளம்புகள் பெருகுவதற்கான சூழலை உருவாக்குகின்றது. பெரும்பாலானவர்கள் நுளம்புத்திரிகளையே தனிநபர் பாதுகாப்பு முறைகளாக பயன்படுத்துகின்றனர். இதற்கான நுளம்புகளின் தொல்லை மாலை வேளைகளிலேயே தீவிரமாக இருப்பதும் இந்த நேரங்களில் மனிதர்கள் வேலை செய்வ தனால் நுளம்புவலைகளை பயன்படுத்த முடியாதிருப்பதும் மின்சார வழங்கல் அற்ற பிரதேசங்களாக இருக்கும் இடங்களில் மினிவிசிறி மற்றும் ஆவியாகும் நுளம்புத்திரிகளை பயன்படுத்த முடியாதுள்ளமையும் காரணங்களாக அமையலாம்.

பொதுவாக இலங்கையிலே ஈடிஸ் *(Aedes)* நுளம்புகள் மாலை வேளைகளிலும் அனோபிலிஸ் *(Anopheles)* நுளம்புகள் இரவிலும் கடிக்கின்றன. எனவே, ஆய்வு செய்யப்பட்ட இடங்களில் அதிகளவிலானோர் மாலை வேளைகளிலேயே நுளம்புக்கடி தீவிரமாக இருப்பதாகக் கூறுவதால் டெங்கு மற்றும் சிக்குன் குனியா போன்ற நோய்களைக் காவும் ஈடிஸ் நுளம்புகள் அதிகளவில் காணப்படலாம்.

### பூச்சிக் கொல்லிகளில் தோய்க்கப்பட்ட நுளம்புவலைகள் விநியோகிக்கப்பட வேண்டும்

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 50வீதமானோர் நுளம்புவலைகளைப் பயன்படுத்துகின்றனர். இலங்கையின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி நுளம்பு வலைகளை உபயோகப்படுத்துதல் மலேரியா நோய்த் தொற்றை பெருமளவு குறைத்துள்ளமை அறியப்பட்டுள்ளது. இவற்றிலும் பூச்சி கொல்லிகளில் தோய்க்கப்பட்ட (Impregnated) நுளம்பு வலைகள் நுளம்புகளால் பரப்பப்படும் நோய்களை பரவாது தடுப்பதில் கூடுதலான வினைத்திறன் கொண்டவை. எனவே, யாழ்.மாவட்டத்திலும் பூச்சிகொல்லிகளில் தோய்க்கப்பட்ட நுளம்புவலைகளை மக்களுக்கு வழங்குவதற்கு சுகாதாரஅதிகாரிகள் கவனம் செலுத்தினால் நுளம்புகளினால் காவப்படும் கணிசமான நோய்கள் கட்டுப்படுத்தப்படலாம்.


**கலாநிதி எஸ்.என்.சுரேந்திரன், ஏ.கஜூதீபன்**
*விலங்கியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்*


சாதாரண மக்களின் பொருளாதார நிலைக்கேற்ப அவர்களின் வருமானத்தில் குறிப்பிடத்தக்க அளவு தனிநபர் பாதுகாப்பு முறைகளுக்காக செலவிடப்படுவதனால் அவர்கள் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள்.

எனவே, சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட காவிக் கட்டுப்பாட்டு முறைகளை செயற்படுத்துவதனால் மக்கள் மேலதிக பொருளாதாரப் பழுவைக் குறைக்க முடியும். எனினும் ஒழுங்குபடுத்தப்பட்ட காவிக்கட்டுப்பாட்டு முறைகளுக்கான செலவினங்கள் அதன் வினைத்திறன் என்பவற்றை மதிப்பிடுவதனால் மட்டுமே இது தொடர்பானஒரு திடமான முடிவிற்கு வர முடியும்.

### நுளம்புத் திரிக்குப் பதிலாக.....

குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் நுளம்புத்திரிகளின் தட்டுப்பாடும் அவற்றின் அதீத விலையும் பெரும்பாலான மக்களின் தனிநபர் பாதுகாப்பு முறையை பாதிக்கலாம். இதனைக் கருத்திற் கொண்டு நுளம்புத்திரிகளுக்கு மாற்றீடாக புகைபோடல், நுளம்புகளை விரட்டும் எண்ணெய் அல்லது களிகளை பயன்படுத்த சுகாதார அதிகாரிகள் மக்களை ஊக்குவிக்கலாம்.

ஆகவே, இந்த ஆய்வின்படி மக்கள் மத்தியில் நுளம்புகள் தொடர்பாகவும் அவை பெருகும் இடம், பரப்பப்படும் நோய்கள் தொடர்பாகவும் கணிசமான அறிவு இருப்பதனால் மக்களோடு இணைக்கப்பட்ட (Community oriented) காவிக்கட்டுப்பாட்டு முறைகளை சுகாதார அதிகாரிகள் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நுளம்புகளால் பரப்பப்படும் நோய்களை கட்டுப்படுத்தலாம். விசேடமாக டெங்கு மற்றும் சிக்குன் குனியா தொடர்பான அச்சத்தை ஓரளவு குறைத்துக் கொள்ளலாம் இதன் மூலமாக மக்களை இந்நோயிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCY
### Field Officer (Jaffna)

Foundation for International Training is inviting applications for the above post. Based in Jaffna office the Field Officer will be responsible for planning, implementation and monitoring the FIT activities. He/She will work closely with partners, relevant government agencies and others. An ideal candidate should have A/L or higher education, experience in working with NGOs, excellent oral and written communication skills in English and Tamil and knowledge of computer applications. Salary and benefits are negotiable. Interested candidates may forward their CVs within one week to the following address:

**Foundation for International Training**
72, Somasundaram Avenue, (55571)
Chudukuli, Jaffna.
E-Mail: fitcolombo@sltnet.lk or fitsrilanka@sltnet.lk

## வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### மீள் கேள்வி அறிவித்தல் - 2007

இப்பத்திரிகையில் கடந்த 10.11.2006ஆம் திகதிய விளம்பரத்தில் குத்தகைக்கு வழங்கப்படாத சந்தை, இறைச்சிக் கடைகளினை 2007ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆகக் குறைந்த கேள்வித்தொகையாக 10.11.2006ஆம் திகதிய விளம்பரத்தில் உள்ள தொகையில் 5% குறைக்கப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:
27.11.2006 - 30.11.2006 பி.ப. 1.00 மணி வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
04.12.2006 முற்பகல் 11.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 04.12.2006 நண்பகல் 12.00 மணி.

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் அலுவலக நேரத்தில் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
24.11.2006

தம்பையா நடராசா
செயலாளர்.
(சி/55465)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி கமலவேணி யோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

**செல்லத்துரை அருளம்பலம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சுதுமலை சிந்மய பாரதி
வித்தியாலய பாடசாலைச் சமூகம்.
(55596)

## 45ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் கிருஷ்ணசாமி சத்தியேஸ்வரன் (சத்தி)

நயினை மண்ணில்
22.01.1961

ஜேர்மனி விண்ணில்
13.10.2006


சக்தி சக்தி என்றழைக்க இப் பூமியிலே நீயில்லை
பாவியாய் நாம் துடிக்க பாதியிலே போனதென்ன
ஆனாக்கி எம்மை நீ பாராளவைத்துவிட்டு
விண்ணாள என்று நீர் விரைந்திட்ட மாயமென்ன
காற்றோடு வந்த செய்தி கனவாகிப் போகாதோ
காலமெல்லாம் உன் நினைப்பில் கலையாது நாமிருப்போம்
நயினைத்தாய் பாதமதில் உம் ஆத்மா சாந்திபெற
இறைஞ்சி துதிக்கின்றோம் இரந்து வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(55583)

நீங்கா நினைவுகளுடன்....
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 | 06 |
| - | - |
| 11 | 12 |
| - | - |
| 1927 | 2005 |



### திருமதி வயிரவிப்பிள்ளை சின்னம்மா

அருகிருந் தெமக்கு அரும்பணிகள் பல செய்து
உயர்வு பெறவைத்த எம் உத்தம தெய்வமே!
ஓராண்டு எம்மை விட்டுச்சென்றாலும்
நாங்கள் உம்மை மறக்காமல் நாளும் வாடுகின்றோம்.

உசன், மிருசுவில்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் கொழும்பில் தனியார் ஒலி, ஒளிபரப்பு நிறுவனத்தில் அறிவிப்பாளராகக் கடமை புரியும் 27 வயது, 66 பாவம், சித்திரை நட்சத்திரம் மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை. கொழும்பில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்ளவும். (55590)

**உதயன் விளம்பர இல. 2934**

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் வீடு யாழ். நகர மத்தியில் (திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை அருகில்) வாடகைக்கு உண்டு.

விவரங்களுக்கு: 69, மடம் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 3506

## துயர் பகருகின்றோம்

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்

### திருமதி சோமேஸ்வரி கைலாசநாதன்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (சி/50477)

## இதய அஞ்சலி

எமது திணைக்களத்தின் கீழ் வலி. வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிந்த



**கந்தையா சிறீபதி R.D.O**

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள்,
நலன்புரிச் சங்கம்,
யாழ். மாவட்டம்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி தர்மலிங்கம்



முத்தட்டி மடம் லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி தர்மலிங்கம் நேற்று முன்தினம் (24.11.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி - யோகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் திரு.திருமதி அப்பாப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தர்மலிங்கத்தின் (முன்னாள் வர்த்தகர் - உரிமையாளர், ராஜா ஸ்ரோர்ஸ், காலி) அன்பு மனைவியும் தர்மராசா (வர்த்தகர் - காலி), ஞானேஸ்வரன் (நிதி - கனடா), தர்மலோசினி (கொழும்பு), சந்திரலோசினி (லைசா - ஆஸ்திரேலியா), ஞானலோசினி (ராசினி - நியூசிலாந்து), தர்மநேசன் (ராசன் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாயும் சந்திராதேவி (காலி), வனிதா (கனடா), ராஜ்குமார் **(Inspector, Srilanka Telecom Ltd-Colombo)**, தியாகலிங்கம் (ஆஸ்திரேலியா), சுதர்சினி (சுதா - ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியும் ஞானபண்டிதர் **(Retired Ceylon Artillery Unit)**, கனகநாயகம் (உரிமையாளர் - கனகேந்திரா கொமினிகேஷன், இணுவில்), மங்கையர்க்கரசி (மானிப்பாய்), மகேஸ்வரி (இராசலட்சுமி - பிரான்ஸ்), மனோன்மணி (பரமேஸ்வரி - கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டி மடம் லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(55592)

தகவல்:
குடும்பத்தினர்.

## விரைவுப் பொதிகள் சேவை
(PARCEL SERVICE)

(பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள்)

சர்வதேச நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:** கொழும்பு/ யாழ்ப்பாணம்/ கொழும்பு விரைவுப் பொதிகள் சேவைகள் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து உங்களுக்குத் தேவையான உணவு, உடை, அலங்காரம், அன்பளிப்பு பொருள்களை எம்மூலமாகக் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன்

**யாழ்/ கொழும்பு/ யாழ்**

விமான ரிக்கற்றுகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3237
011 5371629 - கொழும்பு
077 7535988 - கொழும்பு
(55532)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் சறோஜினிதேவி



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் சரோஜினிதேவி வெளளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் மனைவியும் சிவகுமார் (ஐங்கரன் களஞ்சிம்), சந்திரகுமாரின் பாசமிகு தாயும் புஸ்பாவதி (யா/வயாவிளான் ம.ம.வி. ஆசிரியர்), யோகமலரின் மாமியும் பேணுஜா, தலக்சனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று சனிக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

272/2, இருபாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்:
சிவகுமார் (ஐங்கரன் களஞ்சியம்),
சந்திரகுமார் (மகன்மார்).

### திருமதி கண்ணகை இராசரத்தினம்
[முன்னாள் ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்]



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகை இராசரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற இராசரத்தினம் (நிலஅளவையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் இரத்தினம், சுகிர்தவதி காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், கனகநாயகம் ஆகியோரின் சகோதரியும் சுகந்தி, சுதாகரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் குணாளன் (கண்ணன்,பருத்தியான் பான்சி ஹவுஸ் உரிமையாளர்), செந்தாமரைவாணி(லண்டன்), சுஜதீபன் (மாணவன் யா/ இந்துக் கல்லூரி), சுவேதா(லண்டன்), சோபிதா(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2006 வெள்ளிக்கிழமை நடை பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணகி இல்லம்,
இணுவில் மேற்கு, இணுவில்.
(55584)

தகவல்:
சு.சுகந்தி (பேபி- மகள்)

### திருமதி பரிமளம் சிதம்பரப்பிள்ளை



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, ஆனந்தபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் சிதம்பரப்பிள்ளை வெள்ளிக்கிழமை (24.11.2006) அன்று மாலை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற லுணுகலை பிரபல வர்த்தகர் சி.சிதம்பரப்பிள்ளையின் பாரியாரும் ஞானேஸ்வரி (பண்டாரவளை), காலஞ்சென்ற லுணுகலை முன்னாள் வர்த்தகர் பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புத்தாயும். காலஞ்சென்ற க. இராசரத்தினம்(பண்டாரவளை) பூ.பராசக்தி (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.11.2006 சனிக்கிழமை ஆனந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தபுரம்,
கிளிநொச்சி
(55584)

தகவல்
பூ.பராசக்தி. (மருமகள்)



### சிவசம்பு நடராசா
[ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியும், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன பாதுகாப்பு அதிகாரியும்]

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு நடராசா நேற்றுமுன்தினம் (24.11.2006) வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாவித்திரிதேவியின் அன்புக் கணவரும் உமாகாந்தன் (பணியாளர், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்) அவர்களின் அன்புத் தந்தையும் வசந்தகுமாரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு.
(55595)

தகவல்
ந.உமாகாந்தன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தமிழர் தாயகத்தை ஒதுக்கிவிட்டு சுபீட்சம் காணும் தெற்கின் கனவு

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தென்னிலங்கை அரசுத் தலைமையைப் பார்த்து நியாயமான கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றார்.

''எமது தமிழர் தாயக மக்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களைப் பிரிந்து, உயிர் உறவுகளை இழந்து, தங்கள் சொந்த வீடு வாசல்களைத் துறந்து, பசி, பட்டினி அவலங்களுடன் தற்காலிக குடிசைகளிலும் மரங்களின் கீழும் மாரி மழையிலும் கடும் காற்றிலும் சிக்குண்டு, போஷாக்கின்றி அல்லற்படுகின்றனர். அவர்களின் இருப்பே - அடுத்த நிமிட வாழ்வே - கேள்விக்குறியாகி அவர்கள் அந்தரப்படும்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து நீங்கள் அதிகம் பீற்றிக் கொள்கின்றீர்கள். 'பாமர மக்களுக்கான - பத்து வருடத் தூர நோக்குடைய - மஹிந்த சிந்தனையை உள்ளடக்கிய வரவு - செலவுத்திட்டம்' என்றெல்லம் புகழாரம் சூட்டி பிரபலாபித்துக்கொள்கின்றீர்கள்.

''தமிழர் தாயகத்தைப் புறக்கணித்து அதனை அடிமைத்தனத்திலும், துயரத்திலும், வேதனையிலும் ஆழ்த்திக் கொண்டு, தென்னிலங்கையை பொருளாதார சுபீட்சத்தை நோக்கி வழி நடத்தலாம் என்று நீங்கள் எண்ணுவீர்களாயின் அது வெறும் பகற்கனவேயன்றி வேறில்லை'' - என்று இடித்துரைத்திருக்கின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

'ஒரு கண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு' என்பதுபோல, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், ஏனைய பொருண்மிய வசதிகள் போன்றவற்றில் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தை அந்நியப் பிரதேசமாகவும் தென்னிலங்கையை சுதேசியத் தாயகமாகவும் கருதிக் கையாள்கிறது தென்னிலங்கை அரசு.

தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தின் ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி, மாவட்ட ரீதியில் செலவிடப்படும் அடிப்படையை மேலோட்டமாக நோக்கினாலேயே இந்தப் பாரபட்சம் அப்பட்டமாகப் புலப்படும்.

சிறுபான்மையினரை ஒதுக்கும் - அடக்கி ஒடுக்கும் - கொள்கைப் போக்கையே பிரிட்டிஷ் காலணித்துவப் பிடியிலிருந்து விடுபட்ட காலம் முதல், தென்னிலங்கை சிங்கள - பௌத்த மேலாதிக்க அரசுகள் கடைப்பிடித்து வருகின்றன.

அதன் விளைவே இனமோதல்களும் குரோதமும் இவ்வளவு தூரம் மோசமடைந்து விபரீத நிலையை எட்டியமையாகும்.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது புரிந்து கொள்ள விரும்பாமல் - ஒடுக்குமுறைக் கொள்கையை மேலும் தீவிரமாகக் கடைப்பிடித்து நிலைவரத்தை மென்மேலும் மோசமடையச் செய்வதற்கு தென்னிலங்கை முயற்சிக்கின்றது போலும்.

பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்துத் துறைகளுக்கு பெருமளவு நிதியை ஒதுக்கி அதன் மூலம் யுத்த முன்னெடுப்பு வரவு - செலவுத் திட்டத்தை மஹிந்தரின் அரசு முன்மொழிந்திருக்கின்றது.

தென்னிலங்கையின் அனைத்து சிங்களக் கட்சிகளும் தமக்கிடையிலான அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமிழர்களுக்கு எதிரான இந்த யுத்தப் பிரகடன - வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக ஆதரித்திருக்கின்றன.

பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை 45 சதவீதம் அதிகரித்து அதன் மூலம் யுத்தப் பிரகடனத்துக்கு முன்னறிவித்தல் விடுத்திருக்கின்றது மஹிந்தரின் அரசு. ஒட்டுமொத்த சிங்களமும் தமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவைத்துவிட்டு - அந்த வரவு - செலவுத் திட்டத்தை ஒன்றுபட்டு ஆதரித்ததன் மூலம் தமிழர் விரோத நடவடிக்கையில் தனது ஐக்கியத்தை நிரூபித்திருக்கின்றது.

இந்த நடவடிக்கை மூலம் -

ஆயுத பலத்தால் - பலாத்காரத்தால் - தமிழர்களை அடக்கிக்கொண்டு அவர்கள் மீது தனது ஒடுக்குமுறை ஆட்சியைத் தொடர்ந்து திணிக்கலாம் என்ற கனவுலகில் இருந்து தென்னிலங்கை இன்னும் மீளவேயில்லை என்பதையும் அது நிரூபித்திருக்கின்றது.

ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது. தமது தாயகத்தில் தமக்கென ஒரு சுயாட்சியை - நிர்வாகக் கட்டமைப்பை - ஆட்சி முறையை - நிலைநிறுத்திப் பேணக்கூடிய வலுவான - பலமான நிலைக்கு தமிழர் தாயகம் தன்னை உயர்திக்கொண்டுவிட்டது.

இந்த அடிப்படை யதார்த்தம் புரியாமல் அரசியல் - காய் நகர்த்தல்களைச் செய்ய முயல்கிறது தென்னிலங்கை.

ஆட்சி அதிகாரங்களைத் தமிழர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வு ஒன்றைக் காண முடியும். அத்தகைய தீர்வு எட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் அதை அத்திவாரமாகக் கொண்டு அதன் அடிப்படையில் பொருளாதார மீட்சியை - சுபீட்சத்தை - நோக்கி முழு நாட்டையும் முன்னேற்ற முடியும்.

அதைச் செய்யாமல் பொருளாதார சுபீட்சம் குறித்து தென்னிலங்கை கனவு காண்பது 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதை' போன்றதுதான்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அதை அரசுக்கு இடித்துரைத்து விளக்கியிருக்கின்றார். ஆனால் அது தென்னிலங்கைக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை. பேரினவாதமும் பௌத்த - சிங்கள மேலாதிக்க வெறியும் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவிடாமல் தென்னிலங்கையின் கண்களை மமதையாக மறைத்து நிற்கின்றன.

கையைச் சுட்டுக்கொள்ளும் பட்டறிவு மூலம்தான் இந்த மறைப்பு மறைந்து உண்மை புரியும் நிலை தென்னிலங்கைக்கு ஏற்படும் போலும்.

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு இல்லையேல் அடுத்தவருட மாவீரர் உரை யாழ்ப்பாணத்தில்

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி. உரை

கொழும்பு,நவ.26

''வடக்கு - கிழக்கில் அரச படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனம் தொடர்ந்தால் அடுத்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி எமது தலைவர் யாழ்ப்பாணத்திலிருந்து மாவீரர் தின உரையை நிகழ்த்துவார்.

''எமது மக்களுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வை முன்வைக்காவிட்டால் விரைவில் நாம் தமிழீழத்தை அமைப்போம். எமது கொடி ஐ.நாவில் பறக்கும். படையினர் உடனடியாக வடக்கு - கிழக்கை விட்டு வெளியேற வேண்டும். இல்லையேல் நாம் வெளியேற்றுவோம்''.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி செல்வராசா கஜேந்திரன் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

வடக்கு - கிழக்கில் இரண்டு பாரிய துறைமுகங்கள் உள்ளன. அந்தத் துறை முகங்கள் எமது மக்கள் வாழ்வதற்கு எந்த வகையிலும் உதவவில்லை.

திருமலை மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்கள் கடற்படையினர் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. நீண்ட கடற்பரப்பை தம் வசப்படுத்தவும் மீன்பிடித் தொழிலைத் தடைசெய்யவும் கடற்படையினர் இந்தத் துறைமுகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

**சமூக நிலையை உருவாக்க வேண்டும்**

மீன்பிடித் தொழிலைப் பாதிப்படையச் செய்து மக்களை பட்டினியில் போடுகின்றது அரசு. இந்த நிலையைத் தொடர விடாது இதை உணர்ந்து அரசு நல்ல சமுக நிலையை உருவாக்க வேண்டும்.

உங்கள் இராணுவப் பலத்தை மாத்திரம் நம்பி எமது மக்களை இந்தத் துறைமுகங்களின் ஊடாக நசுக்க முற்பட்டால் அது அரசிற்குப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.



வடக்கு - கிழக்கில் ஒவ்வொரு நாளும் தமிழர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான மனித உரிமை மீறல்களை அரசு சர்வதேச சமூகத்திற்கு காட்டாது அவற்றை மறைத்து சர்வதேசத்திடமிருந்து பணத்தைப்பெற்று தமிழர்களையே கொலை செய்கிறது.

எமது மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவது மஹிந்த ராஜக்ஷவின் காலத்தில்தான்.

தமிழர்கள் பலம் தமிழர்கள் கையில் தான் இருக்கவேண்டும். அந்தப் பலம் எம்மிடம் நிறையவே உள்ளது. அதை நாம் ஒரு போதும் இழக்கமாட்டோம்.

நீங்கள் எந்தத் தீர்வுத்திட்டத்தை முன் வைத்தாலும் எமது இராணுவப் பலம் எம்மோடு இருக்கக்கூடியதான தீர்வாக அமையவேண்டும். அப்படி இல்லாது விட்டால் தனிநாடு உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.

அரச படையினர் எமது மண்ணில் மேற்கொண்டு வரும் அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. உரிமைக்கா கப் போராடும் ஓர் இனத்திடம் இந்த அட்டூழியம் நிலைக்காது.

எமது மக்களுக்குப் பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க அரசு முன் வரவேண்டும். அப்படி இல்லாது போனால் மிகவிரைவில் வடக்கு - கிழக்கில் தமிழீழத்தை உருவாக்குவோம்.

இப்போது வடக்கு - கிழக்கில் இடம் பெறுகின்ற நிலைமை தொடர்ந்தால் அடுத்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி எமது தலைவர் யாழ்ப்பாணத்திலிருந்து மாவீரர் தின உரையை நிகழ்த்துவார். எமது கொடி பறக்கும் - என்றார். (7)

# மன்மோகன் சிங் அனுப்பிய செய்தியை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும்

## ஐ.தே.கட்சி எம்.பி. கோரிக்கை

கொழும்பு,நவ.26

இலங்கையின் தேசியப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு என்னவென்பதை இலங்கை அரசு சர்வதேச நாடுகளுக்குத் தெரிவிக்கவேண்டும். அதன்மூலம் சர்வதேச நாடுகளில் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் அவப்பெயரை இல்லாதொழிக்கவேண்டும்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் இந்திய் பிரதமர் மன்மோகன் சிங்கிடமிருந்து இலங்கைக்கு கொண்டுவந்த இலங்கை பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்று விளக்கும் கடிதத்தை இந்தச் சபையில் சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அமைச்சருக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பி. ஜோன் அமரதுங்க கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

முன்பெல்லாம் இணைத் தலைமை நாடுகளின் கூட்டங்கள் நடைபெற்றபோது அந்த நாடுகள் இலங்கைக்கு பாராட்டுத் தெரிவித்தன. புலிகள்தான் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் எனக் கூறி அவர்களை வன்மையாகக் கண்டித்தன.


நாடாளுமன்றத்தில் நந்து...

ஆனால், இப்போது இணைத்தலைமைகள் இலங்கை அரசு யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் அப்பாவி மக்களைக் கொலை செய்வதாகவும் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

**ஐ.நா.தூதரின் கருத்து இலங்கைக்கு அவப்பெயர்**

அரசு கருணா அணியினருடன் சேர்ந்து சிறுவர்களைப் படையில் சேர்க்கின்றது என்று கனடாவின் முன்னாள் அமைச்சர் அலன் ரொக் கூறியுள்ளார். இதெல்லாம் எமது நாட்டின் நற்பெயரைக் கெடுத்துள்ளன.

இதேவேளை, இலங்கையின் பிரச்சினை காரணமாக இந்தியாவுக்கு தலையிடி ஏற்பட்டுள்ளது. தமிழக மக்கள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பாரிய அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றனர்.



இந்தியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதிக்கு எதிர்ப்பைத் தெரிவிக்க தமிழக மக்கள் தயாராகிவிட்டனர். இலங்கைப் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதாய் தெரிகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் இந்திய விஜயம் சரியானதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஜனாதிபதியின் கை இரத்தக்கறை படிந்துள்ளதாக தமிழக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ் சங்கர் மேனன் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்திய நிலைப்பாடு அடங்கிய என்ன செய்தியை இலங்கைக்குக் கொண்டுவந்தார் என்பதை இந்த சபைக்குத் தெரிவிக்கவேண்டும்.

அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிடமிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொண்டு வந்த கடிதத்தை இந்தச் சபையில் சமர்ப்பிக்கவேண்டும்.

அக்கடிதத்தில் அடங்கியுள்ள இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை நாம் அனைவரும் அறியவிரும்புகின்றோம்.

எமது நாட்டின் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை சர்வதேச நாடுகளுக்கு நீங்கள் அறியத்தரவேண்டும். இல்லையேல் சர்வதேச நாடுகளில் எமது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தியை இல்லாதொழிக்க முடியாது. சர்வதேச மட்டத்தில் எமது நாடு மேலும் மேலும் அவமானப்படுவதை ஏற்க முடியாது - என்றார்.

# இடம்பெயர்ந்தவர்களை ஆறு வருடங்களுக்குள் மீளக்குடியேற்ற யு.என்.எச்.சி.ஆருடன் சேர்ந்து திட்டம்

## அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தகவல்

கொழும்பு, நவ.26

இடம்பெயர்ந்தவர்களை இன்னும் ஆறு வருட காலத்துக்குள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகத்தின் உதவியுடன் சொந்த இடங்களில் மீண்டும் குடியேற்ற அரசு திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்துக்கு பதிலளித்து அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

வாகரைக்கு இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களை மீளக்குடியேற்ற சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். இதற்கு சம்பந்தன், துரைரட்ணசிங்கம் ஆகிய எம்.பிக்களும் உதவ வேண்டும்.

யாழ்.குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் நலன்களுக்காக புத்தளத்தில் தனியான செயலகமொன்று நிறுவப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி மஹிந்த பிரதமராகவிருந்த கால கட்டத்தில் இதற்கான அடிக்கல் நடப்பட்டது.

வன்முறை, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் குறித்து கடந்த ஒரு வருட காலமாக தாம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்துடன்(யு.என்.எச்.சி.ஆருடன்) இணைந்து தகவல்களைத் திரட்டி வருகின்றோம்.

இன்னும் ஆறு வருட காலத்துக்குள் இடம்பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களில் அல்லது அவர்கள் விரும்பும் இடங்களில் குடியமர்த்த திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (த)

## நாளை

கார்த்திகை 11
திங்கட்கிழமை
27.11.2006
திதி : சப்தமி
முன்னிரவு : 11.11
நட்சத்திரம் : அவிட்டம்
பின்னிரவு : 01.48
சுபநேரம் : 12.12 - 01.42
ராகுகாலம் : 07.42 - 09.12

## கருத்தரங்கு

தென்மராட்சி,நவ.26

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி கிளை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 30ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு மீசாலை கிழக்கு திருப்புகழ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வீட்டுத் தோட்டச் செய்கையினை ஊக்குவிப்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்கள், தொண்டர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கிளைத்தலைவர் டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம் அறிவித்துள்ளார். அன்றையதினம் பொது மக்களுக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை வெளியேறச் செய்துவிட்டு வாகரையை கைப்பற்றும் அரசின் முயற்சி வெற்றியளிக்காது

## ஜெயானந்தமூர்த்தி சபையில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

வாகரைக்கு உணவுப் பொருள்களைச் செல்லவிடாது தடுத்து அம்மக்களைப் பட்டினியால் வாட்டி அதன்மூலம் அவர்களை வாகரையில் இருந்து வெளியேற்றுவதற்கும் வாகரையைக் கைப்பற்றுவதற்கும் அரசு முயற்சிசெய்கிறது. அரசின் அந்த முயற்சி வெற்றியளிக்காது.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜெயானந்தமூர்த்தி கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத்தில் தன்னிறைவு அடைந்த வரலாறு ஒன்று இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் உணவுத் தேவைகளைப்பூர்த்திசெய்து கொழும்பு உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களுக்கும் அரிசி மட்டக்களப்பில் இருந்து விநியோகிக்கப்பட்டது. தற்போது மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கே உணவு இல்லாத நிலை தோன்றியுள்ளது.

மட்டக்களப்பில் விவசாயம் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அரச படையினரின், மோசமான நடவடிக்கையே இதற்குக் காரணம். அதிகமான விவசாய நிலங்களில் விவசாயிகள் விவசாயம் பண்ணமுடியாத அளவுக்குப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

பொலனறுவையில் மானிய அடிப்படையில் வழங்கப்படும் உரம் மட்டக்களப்பு நகருக்குள் கொண்டுவந்து களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகின்றது. ஆனால், மட்டக்களப்பு நகரிலிருந்து 40 கிலோ மீற்றருக்கப்பால் விவசாய நிலங்கள் உள்ளன. விவசாயிகள் உரத்தைப் பெற அந்தத் தொலைவில் இருந்து நகருக்கு வரவேண்டியுள்ளது. அவ்வாறு வந்தாலும் அவர்களால் உரத்தை வாங்கிச் செல்லமுடியாது.

அரச படையினர் சோதனைச் சாவடிகளில் சோதனைசெய்து அந்த உரத்தை எடுத்துச் செல்லத் தடை விதிக்கின்றனர். இதன்காரணத்தாலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

உரத்தை அந்தந்த விவசாய இடங்களுக்குக் கொண்டுபோய் வழங்கக் கூடிய ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளவேண்டும். அதற்கமைவாக கமநல அமைப்புகளிடம் உரத்தை ஒப்படைக்க அரசு முன்வரவேண்டும்.

மட்டக்களப்பில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளமை காரணமாகவும் வாகரைக்கு உணவுப்பொருள்களைக்கொண்டு செல்லவிடாமல் படையினர் தடுப்பதன் காரணமாகவும் வாகரை மக்கள் பெரும் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர்.

இதுபற்றி நாம் ஜனாதிபதியிடம் பல தடவைகள் எடுத்துக்கூறிவிட்டோம். உணவுப் பொருள்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனக்கூறுகின்றனர். ஆனால், படையினர் தொடர்ந்தும் உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்லவிடாமல் தடுக்கின்றனர்.

உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கருகில் செல்லுகின்றபோது படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். புலிகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் எனக்கூறி உணவுப் பொருள்களைக்கொண்டுசெல்கின்ற வாகனங்களைத் திருப்பிவிடுகின்றனர்.

வாகரை மக்களைப் பட்டினியால் வாட்டி அவர்களை அங்கிருந்து இடம்பெயர்த்துவிட்டு வாகரையைக் கைப்பற்றப் படையினர் முயற்சி செய்கின்றனர். இம்முயற்சி ஒருபோதும் வெற்றிபெறாது - எனக்கூறினார். (07)

## போலி ஏ.ரி.எம். அட்டை மூலம் பணமோசடி

# இலங்கைத் தமிழர்கள் அறுவருக்கு சிங்கப்பூரில் சிறைத் தண்டனை!

சிங்கப்பூர், நவ.26

போலி 'ஏ.ரி.எம்' பண அட்டைகளைப் பயன்படுத்தி சிங்கப்பூரிலுள்ள வங்கி இயந்திரங்கள் மூலம் பிரிட்டிஷ் வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தை 'ஜேப்படி' செய்த ஆறு பேரைக் கொண்ட தமிழ்க் கும்பல் ஒன்றுக்கு சிங்கப்பூர் நீதிமன்றம் நான்கு வருடம் முதல் 10 வருடம் வரையிலான சிறைத் தண்டனை வழங்கி ஆறு பேரையும் சிறைக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

பிரிட்டனில் வாழ்ந்து வந்தவர்களான ஆறு பேரும் உல்லாசப் பயணிகளாக சிங்கப்பூர் வந்து ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தே இந்தப் பண மோசடிக்கான திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளனர் என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கரையோரங்களில் காந்தக் கீற்றுக்கள் பொதிந்த வெள்ளை நிற வெற்று 'ஏ.ரி.எம்.' அட்டையுடன் கடந்த மே மாதம் சிங்கப்பூர் வந்த இவர்கள், பிரிட்டிஷ் வாசிகளான 'யுனைட்டெட் ஓவர்சீஸ் வங்கி'யின் வாடிக்கையாளர்களின் கணக்குகளிலிருந்து திட்டமிட்ட முறையில், இந்தப் பண ஜேப்படியைச் செய்துள்ளனர். 'ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்', விமான நிலையம் என்பவற்றிலுள்ள வங்கி இயந்திரங்களிலிருந்து இந்தப் பண ஜேப்படியை நடத்தியுள்ளனராம்.

3 லட்சத்து 50 ஆயிரம் சிங்கப்பூர் டொலரை இவர்கள் ஆறு பேரும் 'ஜேப்படி' செய்து விட்டு, நான்காவது தடவை மற்றொரு ஜேப்படிக்குத் தயாரானபோதே மாட்டிக்கொண்டுள்ளனர்.

வங்கி இயந்திரத்தில் மாட்டுப்பட்ட 'ஏ.ரி.எம்.' அட்டை வெளிவராது 'மக்கர்' பண்ணவே வங்கித் தொழில்நுட்பவியலாளர், அட்டையை வெளியே எடுக்க முன்வந்தபோதே இந்த 'ஜேப்படி' அம்பலமானது.

முன்னாள் வங்கி முகாமையாளரான ஏரம்பரமூர்த்தி ரமணன் (வயது-26), வேலை எதுவும் இல்லாத இராமச்சந்திரன் நிஷாந்தன்(வயது-29), களஞ்சியப் பொறுப்பாளர் அமிர்தலிங்கம் புகழேந்தி (வயது-28), நடராஜா பார்த்திபன் (கார்ச் சாரதி), விற்பனை முகாமையாளர் இரத்தினவேல் குமார் (வயது -28), நிமலன் ஆகியோரே இந்த மோசடியில் சிக்கித்தண்டனை பெற்றவர்களாவர். பணமோசடிக்கு உடந்தையாக இருந்தது உட்பட மோசடிக் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டதை அடுத்து ஆறு பேருக்கும், நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துக் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பளித்தது. ஆகக் குறைந்த தண்டனையாக ஒருவருக்கு 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஏனையோருக்கு குற்றச்சாட்டுக்கு ஏற்ப ஆகக் கூடுதல் பத்து வருடம் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

### தென்மராட்சியில் பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் சேவையாற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்களுக்கு இரு நாள்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 29ஆம் 30 ஆம் திகதிகளில் மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் ஆலய திருப்புகழ் மண்டபத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி கிளைத்தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்டக் கிளை மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் பயிற்சி நிலையத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி கல்... வலயப் பாடசாலைகளில் தரம் 6, தரம் 9 ஆகிய வகுப்புகளில் அடுத்த வருடம் அறிமுகப்படுத்தப்படவுள்ள வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் ஆகிய பாடங்கள் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் டிசெம்பர் முதலாம், 3ஆம் திகதிகளிலும், புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் டிசெம்பர் 4ஆம், 5ஆம் திகதிகளிலும் வாழ்க்கைத் தேர்ச்சியும்குடியுரிமைக் கல்வியும் செயலமர்வுகள் டிசெம்பர் 9ஆம், 10ஆம் திகதிகளிலும் நடத்தப்படவுள்ளன. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளதால் பொருத்தமான ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### அனுசரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக் குழுவினர் மீண்டும் பூநகரி செல்லத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கமுடியாது என்று அரசின் சமாதானச் செயலகம் தெரிவித்ததையடுத்து பூநகரி பயணத்தை கண்காணிப்புக்குழுவினர் ரத்துச் செய்தனர் என இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (1)

### நினைவு தின விழா

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனர் சேர்.பொன்.இராமநாதனின் நினைவுதின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7 மணி முதல் 9 மணிவரை பல்கலைக்கழக வளாகத்தில் கோயில் கொண்டுள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து வளாகத்தில் உள்ள சேர். பொன்.இராமநாதன் அவர்களது சிலைக்கும், உருவப்படத்திற்கும் துணைவேந்தர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெறும். (203)

### இந்தியாவின் ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

தமிழர்களை இந்தியாவுக்குத் தப்பி ஓடுவதற்குப் பலவந்தப்படுத்தி அதன் மூலம் இந்தியாவில் ஒரு நெருக்குதல் நிலைமையைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அவ்வாறு செய்வதன் மூலம் தென் இந்தியாவில் அகதிகள் பிரச்சினையை பெரும் விவகாரமாக்குவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர்.

ஆனால், இது விடயத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு உள்ளது.

**7 ஆயிரம் தொன் உணவு அனுப்ப இந்தியா ஏற்பாடு**

இந்தியா ஏழாயிரம் தொன் உணவுப் பொருள்களை எமக்குத் தந்து உதவுதற்கு முன்வந்துள்ளது. அந்தப் பொருள்களை விநியோகிப்பது தொடர்பான ஏற்பாடுகள் குறித்து கலந்தாலோசனை செய்வது வருகிறோம்.

வியாழக்கிழமை இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனுடன் நடத்திய கருத்துப் பரிமாற்றங்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன.

1990களுக்கு முன்னர் அவர் கொழும்பில் இந்தியாவின் தூதராகப் பணிபுரிந்தவர். ஆகையால் எமது நாட்டு விடயங்களை நன்கறிந்தவர். தமது தமிழ் நண்பர்களை எல்லோரையும் விடுதலைப் புலிகள் கொன்றுவிட்டதாகவும் அந்த நண்பர்களின் விதவைகள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

**கூட்டுரோந்து குறித்துப் பேச்சு**

கடற்பகுதியில் இந்திய - இலங்கைக் கூட்டு ரோந்து சேவைகளை நடத்துவது குறித்து இந்தியத் தலைவர்களுடன் நான் பேசவுள்ளேன்.

கடற் புலிகள் சக்திமிக்க கடற்படையான உருவெடுத்து வருகின்றனர். அவர்கள் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் உலகத்துக்குமே பெரும் அச்சுறுத்தலாக உள்ளார்கள்.

கூட்டுக்கடல் ரோந்து செய்வதன் மூலம் ஆயுதக் கடத்தல்களையும் போதைப் பொருள் கடத்தல்களையும் கட்டுப்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம்.

கடந்த சில வாரங்களில் இந்திய மீனவர்களின் ட்றோலர்களை விடுதலைப் புலிகள் தமது சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காகப் பறிமுதல் செய்திருக்கின்றனர். கடற்புலிகளின் அச்சுறுத்தல் குறித்து இரு தரப்புகளும் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது - என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

உத்தரப்பிரதேசத்தின் தெஹ்ராடன் நகரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் ஆசிய மேயர்கள் மாநாட்டில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கிறார்.

செவ்வாய்க்கிழமை புதுடில்லி செல்லும் அவர், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் பேச்சு நடத்துவார்.

இம்மாதம் 29ஆம் திகதி அல்லது 30ஆம் திகதி அவர் கொழும்பு திரும்புவார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கு இரண்டாவது தடவையாக விஜயம் செய்கிறார். (அ)

BRIGHTMAN INSTITUTE
NERAVEADY
PAPER CLASS
Start On
01.12.2006
4.00 - 5.00 p.m.
A.A.T (Stage 1)
ENGLISH MEDIUM

### ஊர்காவற்றுறையில் கிணற்றுக்குள்ளிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.26

ஊர்காவற்றுறை சுரம்பன் பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றுக்குள்ளிருந்து நேற்று முன்தினம் உருக்குலைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

அப்பகுதியில் துர்நாற்றம் வீசியதையடுத்து பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர் எனவும் - அதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த கிணற்றுக்குள் சடலத்தைக் கண்டுபிடித்து மீட்டனர் எனவும்- தெரிவிக்கப்பட்டது. சுமார் 30 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலம் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. சடலம் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை. (த-12)

### கரவெட்டியில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.26

கரவெட்டி மாலு சந்தியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வதிரி, தேவ...யாளியைச் சேர்ந்த எஸ்.ரகுலன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவராவார்.

அந்தப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளைப் படையினர் அகற்றிக் கொண்டிருந்தனர் என்றும்-

அப்போது அவர்கள் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் சிக்கி பிரஸ்தாப நபர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-155)

### அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டிலுள்ள காஞ்சிரங்குடா ஆறு, தங்கவேலாயுதபுரம் பகுதிகள் நோக்கி தொடர்ச்சியான மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அப்பகுதிகளிலுள்ள பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

இந்த மோதல் தொடர்பாக விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிடுகையில்,

இதில் நான்கு புலிகள் உயிரிழந்திருக்க லாம் என்று தாங்கள் கருதுகின்றனர் எனவும் -

புலிகளின் ரி. 56 ரகத் துப்பாக்கிகள் 2, பிஸ்டல் 1 மற்றும் வோக்கி டோக்கி என்பவற்றை அதிரடிப் படையினர் மீண்டுள்ளனர் எனவும் கூறினார். (த- 12)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org